IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI

OS. No.206/2019 Date: 18.10.2023

PW 1 – கதிர்வேல்

சாட்சி மீண்டும் முன்னிலையானதன் பேரில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

எனக்கு டிரான்ஸ்போர்ட் தொழில் தவிர வேறு தொழில் எனக்கு இல்லை என நான் சொல்லி இருந்தால் அது பொய் என்றால் சரிதான். தாவா கடனுக்கு நான் கடனுறுதி சீட்டை தவிர வேறு ஆதரவு எதுவும் நான் வாங்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் பிரதிவாதியின் கையொப்பம் ஆங்கிலத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் பிரதிவாதியின் கையொப்பம் தமிழில் தான் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் கணவர் நடத்தி வந்த தறிபட்டறையில் தினேஷ் என்பவர் வேலை செய்து வந்தார் என்றாலும், அவருக்காக தான் பிரதிவாதி வெங்கடேஸ்வரா பைனான்சில் கடன் வாங்கி கொடுத்தார் என்றாலும் அந்த கடனுக்கு ஆதரவாக தான் தாவா புரோநோட்டில் பிரதிவாதியிடம் கையொப்பம் வாங்கி கொண்டோம் என்றால் சரியல்ல. தினேஷ் வெங்கடேஸ்வரா பைனான்சில் ரூ.2,10,000/- தான் கடன் வாங்கினார் என்றால் எனக்கு தெரியாது. தினேஷ் கடனை திருப்பி செலுத்தாமல் தலைமறைவு ஆகிவிட்டதால் பிரதிவாதி மீது நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தினேஷ் வாங்கிய கடனுக்காக பிரதிவாதியும் அவரது கணவரும் சேர்ந்து மொத்தம் ரூ.6 லட்சம் திருப்பி செலுத்தியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அதன் பிறகும் கூடுதல் வட்டி கேட்டு நான் இத்தாவாவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி பணத்தை திருப்பி செலுத்திய பிறகு புரோநோட்டு மீது நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டு தற்போது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானும், ராஜேந்திரனும் கூட்டு சேர்ந்து தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வெங்கடேஸ்வரா பைனான்சை ராஜேந்திரன் தான் M.D ஆக இருந்து கவனித்து வருகிறார் என்றால் சரியல்ல. ஆனால் அவரும் பங்குதாரர் தான். பிரதிவாதிகள் பணத்தை செலுத்திய பிறகும் துர்லாபம் அடைய வேண்டி தாவாவை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-கதிர்வேல்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்
சார்பு நீதிபதி, சங்ககிரி.